# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0310 /2016

ஆணை எண்: 124 /2016/ந

நாள்: 15 / 07/2016

திரு.சா. ராபர்ட் பன்னீர் செல்வம்/
திரு. E.கருணாகரன்
இராஜாஜிபுரம் குடியிருப்போர் நலச் சங்கம்,
திருவள்ளூர்

மனுதாரர்

1. நகராட்சி ஆணையர், திருவள்ளூர் நகராட்சி
2. நகராட்சி பணி மேற்பார்வையாளர்
   திருவள்ளூர் நகராட்சி,

எதிர் மனுதாரர்

## ஆணை

15.04.2016 நாளிட்ட மனுதாரர்களது முறையீடு 18.04.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0310/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு திருவள்ளூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணி / இணைப்பு வழங்குவது தொடர்பானதாகும். இப்பொருள் குறித்து நகராட்சியிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள், பத்திரிக்கைச் செய்திகள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

மனுதாரர்களது 15.04.2016 நாளிட்ட முறையீட்டில் திருவள்ளூர் நகராட்சியின் தங்கள் பகுதியில் வீடுகளுக்கு பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புக்கென கூடுதலாக குறைந்தபட்சம் ரூ.5,000/– செலுத்தப்பட வேண்டியுள்ளதாகவும், நகராட்சி / தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறையினரால் கல்வடிகால் குழாய்கள் ஒவ்வொரு வீட்டின் எல்லைச் சுவர் வரை பதிக்கப்பட்டுள்ள நிலையில் வீடுகளிலிருந்து இணைப்பு பணிக்கென தனியார் ஒப்பந்ததாரர் மிக அதிக அளவில் கட்டணம் வசூலிப்பது தங்களை சிரமத்திற்குள்ளாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 12.04.2016 நாளிட்ட இராஜாஜிபுரம் நலச்சங்க தலைவரது, திருவள்ளூர் நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட இப்பொருள் தொடர்பான தங்களது கடித நகலினையும், திருவள்ளூர் நகராட்சியால் "பொதுமக்கள் பாதாள சாக்கடை முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டுகோள்" என்ற வைப்புத் தொகை மற்றும் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய மாதக் கட்டண விவரங்களடங்கிய விளம்பர பிரசுரத்தின் நகலினையும் ஆதாரங்களாக தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி விளம்பர பிரசுரத்தின் பின்புறம் "திரு.S.கோமதீஸ்வரன் Cell: 9843674912 4' இன்ச் பைப்புக்கு மட்டும், மினிமம் சார்ஜ் Rs.5,000/– (1 +10 அடி வரைக்கும் மட்டும் + ஒரு சேம்பர்) 10 அடிக்கு மேல் Rs.275 per Sq.ft Extra Chamber: Rs.1500/– என்ற வாசகங்களடங்கிய முத்திரை இடப்பட்டிருந்தது. இவ்வாறான கூடுதல் கட்டணம் தனியார் ஒப்பந்ததாரரால் வசூலிக்கப்படுவது குறித்து மனுதாரர்களது 12.04.2016 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக நகராட்சி ஆணையருக்கு புகாரும் அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர்களது 18.04.2016 நாளிடப்பட்டு திருவள்ளூர் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் / இணைப்பு குறித்து கீழ்க்கண்டுள்ளவாறான கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன.

i) வைப்புத் தொகை மற்றும் பராமரிப்பு கட்டணத் தொகை நகராட்சிக்கு செலுத்தப்படுவது போல் இணைப்புகள் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய சிறு கட்டுமானப் பணிகள் (pit அமைத்தல்) வீடுகளில் செய்திடுவதற்கு நகராட்சி மூலமாகவே ஒப்பந்ததாரர் நிர்ணயிக்கப்படுவதன் மூலம் பணிகள் சீராகவும் ஒரே மாதிரியாகவும் அமைவதோடு மட்டுமின்றி நகராட்சிக்கு வருவாய் ஈட்டிடவும் வழிவகைகள் செய்யப்படலாம்.

ii) இப்பணிகளுக்கான தொகையினை கட்டிடத்தின் அளவுகளுக்கேற்ப வைப்புத்தொகை நிர்ணயிக்கப்படுவது போல் வீட்டிற்குள் இணைப்பு வழங்கப்பட வேண்டிய தூரத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்படும் தொகையுடன்

பராமரிப்புத் தொகையினையும் சேர்த்து நகராட்சியால் உரிய ரசீதுகளுடன் வசூலிக்கப் பட வேண்டும். மேலும், ஒரே சீராக இணைப்புகளுக்கான கட்டுமானப்பணிகள் அமைவதால் நகராட்சியின் பிற்கால பராமரிப்பு பணிகளிலும் சிரமங்கள் தவிர்க்கப்படும்.

iii) குடியிருப்பு பகுதிகளில் ஒரு சில பகுதிகளில் ஒருபுறமோ அல்லது இரு புறங்களிலுமோ மழை நீர் வடிகால் கால்வாய்கள் கட்டப்படாத நிலை உள்ளது. அத்தகைய இடங்களில் வீடுகளுக்கு வெளியே பாதாள சாக்கடை இணைப்புகளெனகுழிகள் (pits / Chamber) அமைக்கப்படுமேயானால் பிற்காலங்களில் மழை நீர் வடிகால் கால்வாய்கள் அமைக்கப்படும்போது சிரமங்கள், பிரச்சனைகள் எழ வாய்ப்புள்ளது. அதேபோல் தற்போது மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பிற்கான குழிகள் (pits) அமைப்பதனால் மழைநீர் வடிகால் கால்வாய்களில் எவ்வித தடையோ அல்லது அமைப்போ ஏற்படாமலிருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

iv) சோழன் தெருவிற்கு தெற்கு பகுதியில் மேட்டுத்தெருவில் (வேலு தம்பி தெருவில்) கழிவு நீர் தொட்டி அமைக்கப்படவில்லை.

பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கென வீடுகளில் செய்யப்பட வேண்டிய சிறு கட்டுமானப் பணிகள், பைப்புகள் பொருத்துதல் போன்ற அனைத்துப் பணிகளையும் நகராட்சியின் கண்காணிப்பின்கீழ் அங்கீகரிக்கபபட்ட ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ளப்படுமேயானால் பணிகள் ஒரே சீராக அமைவதுடன் பராமரிப்பின் போது சிரமங்களின்றியும் நகராட்சியின் வருவாயை அதிகாரிக்கவும் வழிவகை ஏற்படும்".

மேற்படி கோரிக்கைகளுக்கான பதில் நகராட்சியிலிருந்து நலச்சங்கத்திற்கு அளிக்கப்பட்டது குறித்தோ அல்லது பதில் பெறப்பட்டது குறித்தோ எவ்வித ஆவண நகலும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்நிலையில் 02.05.2016 அன்று மனுதாரர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டு அவர்களது வாக்குமூலங்கள் பெறப்பட்டன. விசாரணையின்போது மனுதாரர்களது 12.04.2016 மற்றும் 18.04.2016 நாளிட்ட திருவள்ளூர் நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட கடிதங்களில் குறிப்பிட்டிருந்த கோரிக்கைகள் குறித்து விவரங்கள் இம்முறைமன்ற நடுவத்தின் முன் மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

மனுதாரர்களது வாக்குமூலங்களில் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்ட இணைப்பு வழங்கும் பணியை செய்யக்கூடிய தொழில் நுட்ப பணியாளர் நியமனம் செய்யப்படவில்லை எனவும் நகராட்சிக்கு சம்பந்தமில்லாத ஒப்பந்ததாரர் திரு.கோமதீஸ்வரன் என்பவரையே

நியமித்துள்ளனரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சியால் வழங்கப்பட்ட விளம்பரப் பிரசுரத்தின் பின்புறம் இந்த தனிப்பட்ட நபர் தனது முத்திரையினை இட்டு தன்னிச்சையாக அதிக கட்டணம் நிர்ணயித்து பணி மேற்கொண்டு வருவது முரண்பட்டதாக உள்ளதென்பதையும், இணைப்பு வழங்குவதில் தவறுகள் ஏற்படுமாயின் நகராட்சியினை பொறுப்பாக்கவோ அல்லது அணுக இயலாத நிலையோ உள்ளதென்பதும் வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறையீட்டின் மீது கோரப்பட்ட திருவள்ளூர் நகராட்சி ஆணையரது அறிக்கை 10.05.2016 அன்று பெறப்பட்டது. இவ்வறிக்கையில் திருவள்ளூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.5479/–இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற நிலையில் கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதாளச் சாக்கடை திட்டப்பணிகளில் வீட்டு உபயோக / பிற உபயோக இணைப்புகள் வழங்குவதற்கு சேவைக்கட்டணம் மற்றும் முன்வைப்புத் தொகை வசூல் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக முதன்மைப் பொறியாளரிடம் பாதாளசாக்கடைத்திட்ட உபவிதிகளுக்கான பொது அங்கீகாரம் பெறப்பட்டு நகர் மன்ற ஒப்புதல் தீர்மானமும் இயற்றப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இணைப்புக் கட்டணம் ரூ.510/– ஐ செலுத்திடத் தெரிவிக்கும் அறிவிப்பில் இணைப்பு கோரும் தனிநபர் பணியினை தாங்களே தங்கள் சொந்த செலவில் மேற்கொள்ள வேண்டுமென தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதாளச்சாக்கடைச் திட்டப்பணிகளில் சுமார் 30 மீட்டர் இடைவெளியிலும் ஆள் இறங்கு குழிகள் (Man hole) அமைத்து அக்குழிகளிலிருந்து ஒவ்வொரு வீடுகளின் எல்லை வரை (மதில் சுவர் வரை) இணைப்புக் குழாய்கள் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ளதெனவும் இணைப்பு வேண்டுவோர் அவரவர் வீடுகளின் சமையலறை, குளியலறை மற்றும் கழிப்பிடத்தின் திரவக் கழிவுகளை தங்களது சொந்த செலவில் பிளாஸ்டிக் குழாய்கள் மூலம் இணைப்பு செய்து ஆய்வு தொட்டி (Inspection Champer) அமைத்து நகராட்சிக்கு தகவல் தெரிவிக்கும் பட்சத்தில் நகராட்சியால் மதில் சுவர்வரை அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் ஆள் இறங்கு குழியுடன் இணைக்கப்பட்டுள்ள கழிவு நீர் குழாயில் இணைப்பு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு ஒரே சீரான மதிப்பீடு தயார் செய்து உட்புறம் இணைப்பு வழங்கும் பணிகளை நகராட்சியால் செய்ய இயலாதெனவும் கட்டட உரிமையாளர்களின் விருப்பங்கள் மாறுபடுமெனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டடத்தின் வெளிபுறம் உள்ள ஆள் இறங்கு குழிகள் முதல் தனிநபரின் கட்டடத்தின் மதில் சுவர்

வரை ஒரே சீரான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளபடி பாதாளச் சாக்கடைத் திட்ட இணைப்பு வழங்கிட திரு.S.கோமதீஸ்வரன் என்ற தனிநபர் கோரியுள்ள கட்டணத்திற்கு நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்க இயலாதெனவும் நகராட்சியால் இணைப்பு வழங்கிடும் பணிக்கென தனிநபர் எவர்மூலமும் பணி மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாஜிபுரம் குடியிருப்போர் நலச்சங்கத்தினர் அவர்களுக்கு விருப்பப்பட்ட கழிவுநீர் குழாய் பணி செய்யும் எந்தவொரு பணியாளர் மூலமும் பணி மேற்கொள்ளலாமெனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை முழுமையாக இம்முறை மன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. அறிக்கையில் நகராட்சியால் வழங்கப்பட்ட விளம்பர பிரசுரங்களின் பின்புறம் ஒரு தனிப்பட்ட நபரது முத்திரை குத்தப்பட்டு விநியோகிக்கப்பட்டது போன்ற சில நிகழ்வுகளுக்கு பதில் அளிக்கப்படாத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தின் 18.05.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் கூடுதல் விவரங்கள் தாக்கல் செய்திட நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதனடிப்படையில் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.1228/16/இ2 நாள்.30.05.2016–ல் கீழ்க்கண்டுள்ளவாறு விவரங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

i) திருவள்ளூர் நகராட்சி சார்பில் பாதாள சாக்கடை முன்வைப்புத் தொகை தொடர்பாக பொதுமக்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட வண்ண விளம்பர பிரசுரங்களில் நகராட்சியின் அங்கீகாரம் ஏதும் பெறாமல் தனியரால் தன்னிச்சையாக விலை நிர்ணய முத்திரை பின்பக்கம் இடப்பட்டுள்ளது. இது குறித்து இராஜாஜிபுரம் குடியிருப்போர் நலச்சங்கம் திருவள்ளூர் சார்பாக 12.04.2016 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் பெறப்பட்டது.

ii) நகராட்சியின் கவனத்திற்கு வராமல் பின்பக்கம் முத்திரை பயன்படுத்திய தனி நபரிடமிருந்து நகராட்சியின் விளம்பர பிரசுரங்கள் மற்றும் முத்திரை கைப்பற்றப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டது.

iii) தனியரால் முத்திரையுடன் கூடிய விளம்பர பிரசுரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தொகை ஏதும் பொது மக்களிடம் வசூல் செய்யாததால் தொகை ஏதும் கைப்பற்றப் படவில்லை.

iv) நகராட்சியால் 2011 ஆம் ஆண்டு 10,000 எண்கள் விளம்பர பிரசுரங்கள் அச்சிடப்பட்ட வகையில் ரூ.9,000/– தொகை செலவிடப்பட்டுள்ளது.

v) பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் புதிய குடியிருப்புகளுக்கான இணைப்பு சிப்பம் 1 மற்றும் சிப்பம் 2 பகுதிகளில் ( சிப்பம் 3 தவிர) தொடர்ந்து நகராட்சியால் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 30.05.2016 வரை 87 எண்ணிக்கை இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளது.

vi) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 15 ஆண்டுகளுக்கு முன்பு தனியார் கலந்தாலோசகர் நியமனம் செய்யப்பட்டு தள ஆய்வு, மதிப்பீடுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு முறையே வாரியத்தால் பாதாளசாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திட்ட மதிப்பீட்டில், புதியதாக விரிவாக்கம் செய்யப்பட்ட வேலு தம்பி தெரு உட்பட ஒரு சில பகுதிதான் விடுபட்டுள்ளது. பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு (சிப்பம் 3 முடிக்கப்பட்ட பின்பு) திட்ட மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு ஏற்ப மிகுதி தொகையில் அல்லது புதியதாக திட்ட மதிப்பீடு தயார் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்''.

மேற்படி அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கூர்ந்து பரிசீலிக்கப்பட்டது. தனிப்பட்ட ஒரு நபர் நகராட்சியால் அச்சிடப்பட்டு பொது மக்களுக்கு வழங்கிட வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பிரசுரங்களை தனது சுய இலாபத்திற்காக தனது தன்னிச்சையான விலை நிர்ணய விவரங்களை பின்புறம் முத்திரையிட்டு நகராட்சியின் பிரதிநிதி போல பொது மக்களிடம் விநியோகித்துள்ளது கண்டனத்துக்குரியது. மேலும், நகராட்சியின் சார்பில் அச்சிடப்பட்ட அத்தகைய விளம்பரப் பிரசுரங்கள் தனிப்பட்ட அங்கீகாரமற்ற ஒரு நபரிடம் சென்றதென்பது நகராட்சி அலுவலர்களின் மெத்தனப் போக்கினை வெளிப்படுத்தும் செயலாகவே கருத வேண்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் மந்தமாக உள்ளதாகவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் இணைப்பிற்கு கூடுதல் கட்டணங்கள்வசூலிக்கப்படுவதாகவும் 31.05.2016 மற்றும் 03.06.2016 ஆகிய நாட்களில் வரப்பெற்ற பத்திரிக்கைச் செய்திகள் தொடர்பாகவும் திருவள்ளூர் நகராட்சி ஆணையரது அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கோரப்பட்டது.

நகராட்சி ஆணையரது 27.06.2016 நாளிட்ட அறிக்கையில் பொதுமக்களிடம் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிட தனியார் தொகை வசூலிப்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பொதுமக்களிடமிருந்து கூடுதல் தொகை பெறுவது குறித்து நகராட்சிக்கு புகார் வரும்பட்சத்தில் சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென

உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதனிடையே இராஜாஜிபுரம் குடியிருப்போர் நலச்சங்க செயலாளரிடமிருந்து வரப்பெற்ற 12.06.2016 நாளிட்ட கடிதத்தில் முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கைகளினால் இராஜாஜிபுரம் மக்கள் பலனடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட ஒரு ஒப்பந்ததாரர் அங்கீகாரமற்ற முறையில் நகராட்சியின் பிரதிநிதி போல செயல்பட்டு சுயலாபமடைவது தற்போது தடுக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது புலனாகிறது. இருப்பினும், விசாரணைகள், அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் பரிசீலித்ததில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இம்முறை மன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

i) நகராட்சியில் அச்சிடப்பட்டு வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பிரசுரங்கள் நகராட்சிக்கு தொடர்பற்ற அல்லது அங்கீகரிக்கப்படாத ஒரு தனிப்பட்ட நபரை சென்றடைந்தமைக்கு அதற்கு பொறுப்பான பணியாளர்களது விளக்கங்கள் பெறப்பட வேண்டும்.

ii) மனுதாரர்களது சங்கத்தினரோ அல்லது பொதுமக்களோ அத்தகைய தனிநபர்களால் பாதாள சாக்கடைத் திட்ட இணைப்பு பணிகள் தொடர்பாக பாதிப்படைந்திருப்பின் குறிப்பான விவரங்கள் மற்றும் ஆதாரங்களை நகராட்சி ஆணையரிடம் சமர்ப்பித்து உரிய தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii) விசாரணைகளின் போது பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் ஆளிறங்கு குழி மற்றும் குழாய் பதித்தல் போன்ற பணிகள் விடுபட்டுள்ள / நடைபெறாத வேலுத்தம்பி தெரு போன்ற பகுதிகளில் குடியிருப்போரும் வைப்புத் தொகையினை நகராட்சியில் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறிருப்பின் விடுபட்ட பகுதிகளுக்கும் பணியின் தன்மைக்கேற்ப கால நிர்ணயம் செய்துமுடிக்கப்படல் வேண்டும். மேலும், நகராட்சி ஆணையாது அறிக்கையிலும் விடுபட்ட பகுதிகளிலும் இத்திட்டப்பணியினை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென உறுதியளிக்கப்பட்டடுள்ளது. அதற்கானகால நிர்ணயம் செய்யப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை தொடர்பான அறிக்கையினை இம்முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்திட வேண்டுமெனவும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

1. நகராட்சி ஆணையர்,
திருவள்ளூர் நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம் –602 001.

2.திரு,ராபர்ட் பன்னீர் செல்வம்,
தலைவர் இராஜாஜிபுரம் குடியிருப்போர் நலச்சங்கம்,
எண்.7, ஜான்சி ராணி தெரு,
இராஜாஜிபுரம், திருவள்ளூர்– 602 001.

3.திரு.E.கருணாகரன்,
செயலாளர், இராஜாஜிபுரம் குடியிருப்போர் நலச்சங்கம்,
எண்.43/444, சோழன் தெரு, இராஜாஜிபுரம், திருவள்ளூர்– 602 001.

<u>நகல்:</u>
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600 005.